## மலைப்பகுதியில் விளையும் மரவள்ளிக்கு கணிசமான விலை கிடைக்கும்

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய அறிவிப்பின் படி, இந்தியாவில் 2015-16ஆம் ஆண்டில் மரவள்ளி 2.12 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 48.42 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாடு 26.99 இலட்சம் டன்கள் மரவள்ளி உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கின்றது. இதனை தொடர்ந்து கேரளா, ஆந்திர பிரதேசம், நாகலாந்து மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்கள் மரவள்ளி உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாட்டில், மரவள்ளி உற்பத்தி செய்யும் மாவட்டங்களில் சேலம் முதலிடம் வகிக்கின்றது. இதனை தொடர்ந்து நாமக்கல், தர்மபுரி, கடலூர், திருவண்ணாமலை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்கள் மரவள்ளி உற்பத்தி செய்கின்றன. வர்த்தக மூலங்களின் படி, ஜவ்வரிசியின் தற்போதைய இருப்பு 15 இலட்சம் மூட்டைகளும் (90 கிலோ/மூட்டை) மற்றும் மரவள்ளிமாவின் இருப்பு 3 இலட்சம் மூட்டைகளும் (90 கிலோ/மூட்டை) உள்ளன. தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளில் மரவள்ளியின் பரப்பளவு குறையாமல் இருந்தாலும் வறட்சியின் காரணமாக மகசூல் குறைய வாய்ப்புள்ளது. எம்விடி-1, ஹெச்-165, ஹெச்-266 ஆகியவை பயிரிடப்படும் முக்கிய மரவள்ளி ரகங்களாகும்.

மரவள்ளியிலிருந்து பெறப்படும் பொருட்களான ஜவ்வரிசி உணவாகவும், மரவள்ளிமாவு பல்வேறு ஆலை உபயோகங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தியா 2015-16 ஆம் ஆண்டில் ரூ.143.69 மில்லியன் மதிப்பிலான 3,334 டன்கள் மரவள்ளி பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. ஐக்கிய அரபு நாடுகள், ஐக்கிய நாடுகள், கத்தார் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது . தாய்லாந்திலிருந்து மரவள்ளிமாவு மற்றும் மாற்றம் செய்யப்பட்ட மாவு ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவ்வருடத்தில் நீண்ட கோடைகாலம் மற்றும் வறட்சியின் காரணமாக உற்பத்தி குறைந்தாலும், அதிக இருப்பின் காரணமாக மரவள்ளியின் விலை அதிக அளவு உயர வாய்ப்பில்லை. எனினும், உள்நாட்டின் மரவள்ளி மாவுவிலையை விட தாய்லாந்து மாவின்

ஏற்றுமதி விலை அதிகமாக உள்ளதால் உள்நாட்டு மரவள்ளி உற்பத்தியாளர்களுக்கு ஏற்ற சூழலாகவும், நியாயமான விலை கிடைப்பதற்கும் வாய்ப்புள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக சேலம் சந்தையில் நிலவிய மரவள்ளியின் விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் மலையில் விளையும் தரமான மரவள்ளியின் விலை ஜூலை-ஆகஸ்ட், 2016 மாதங்களில் டன்னிற்கு ரூ. 5,500 – 6,000 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374, 0422- 6611283